கனம் திரு. எம். பக்தவத்சலம்: நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. ஒரு திட்டம் எடுத்துக் கொள்ளும்போது இந்த நிலம் அதற்காக ஒதுக்கப்படலாம் என்ற முறையில் இடம் காட்டப் பட்டது. இதோ தகுதியான நிலம் இருக்கிறது என்று காட்டப் பட்டது. பிறகு, இதை மத்திய அரசாங்கம் வேறு இடத்தில் வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் எனக்குத் தெரியாது. இங்கே வைக்கலாம் என்று நாங்கள் தெரிவித்திருந்தோம்.

திரு. இராம. அரங்கண்ணல்: தமிழகம் கடலோரப் பகுதி நிரம்பிய பிரதேசம் என்ற காரணத்தால், மீன் பிடிக்க வசதியாக இருக்கிறது என்ற காரணத்தால் தமிழகத்திலே இந்தத் தொழிற் சாலையை அமைப்பதற்கு மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசாங்கம் வற்புறுத்துமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தக் கருத்தை இந்த அரசு தெரிவித்திருக்கிறது.

அரசாங்கத் தொழில் பட்டறை, வேலூர்

***110 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், வேலூர் நகரத்தில் உள்ள அரசாங்கத் தொழில் பட்டறையில் 1965 ஜனவரி முதல் 1966 ஜனவரி 30-ம் தேதி முடிய கட்டில், பீரோ முதலிய பர்னிச்சர் எவ்வளவு மதிப்புள்ள சாமான்கள் தயாரிக்கப்பட்டன?

(இ) மேற்படி ஆண்டில் அதன் லாப நஷ்டக் கணக்கு என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) வேலூரிலுள்ள பொது நோக்குப் பொறியியல் பட்டறையைப்பற்றி கனம் உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். அவ்வாறாயின் இப்பட்டறையில் 1965 ஜனவரி முதல் 1966 ஜனவரி 30-ம் தேதி வரையில் ரூ. 13,55,378 மதிப்புள்ள கட்டில், அலமாரி போன்ற சாமான்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) இப்பட்டறையின் மூலம் 1—1—1965 முதற்கொண்டு 30—1—1966 வரை ரூ. 2.49 லட்சம் லாபம் கிடைத்துள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் கூட்டுறவு நூற்பாலை

***111 கேள்வி.—திரு. பி. முருகையன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் உள்ள கூட்டுறவு நூற்பு ஆலை அமைக்க சர்க்கார் அனுமதி அளித்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், எப்போது அனுமதி வழங்கப்பட்டது?